14.07.2025 OS.No.116/2022 PW1 Name :.ராஜமணிக்கம்

குறுக்கு விசாரணை

1. எனக்கு தமிழ் எழுதபடிக்க சரியாக தெரியாது. வழக்கு எதற்காக போடபட்டுள்ளது என்பது தெரியும். சிராஜ் என்பவர் மீதும் ரபியா என்பவர் மீதும் போட்டுள்ளேன். பணத்தை திரும்ப பெறுவதற்காக போட்டுள்ளேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். மற்ற வருமானம் எதுவும் இல்லை. சீட்டு எதுவும் நடத்துவதில்லை. மேஸ்திரி வேலை வருமானத்தை தவிர என்னுடைய மகன்கள் வேலை செய்து வருமானம் கிடைக்கிறது.
2. இரண்டு மகன் உள்ளார்கள். ஒருவர் துபாயில் வேலை செய்கிறார். மற்றொருவர் உள்ளுரில் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறார். பிரதிவாதியை நேரில் பார்த்துள்ளேன். சுமார் 5 ஆண்டுகளாக அவரை தெரியும். கொடையாஞ்சியை சேர்ந்த சாம்ராஜ் என்பவர் மூலம் பிரதிவாதி அவரது கணவரை தெரியும். பிரதிவாதி குடும்பத்திற்கு பணம் தேவை உள்ளதாக கூறி என்னிடம் அறிமுகபடுத்திவைத்தார். வழக்குரையில் அதை கூறவில்லை.
3. பிரதிவாதி சாம்ராஜியிடம் மட்டும் தான் பணம் வாங்கியுள்ளார் என்றும் அந்த பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் எனக்கு வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு விஜயா வங்கி மற்றும் ஸ்டேட் வங்கியில் வங்கி கணக்குகள் உள்ளது. விஜயா பேங் மூலமாக பணபரிமாற்றம் செய்தேன். தேதி நியாபகம் இல்லை. 2019, 2022ல் பணபரிமாற்றம் செய்துள்ளேன். விஜயா வங்கி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 1 முதல் வாசாஆ 5

வரையுள்ள ஆவணங்களில் உள்ள முழு விவரம் எனக்கு தெரியாது.

4. என்னுடைய வங்கி கணக்கு புத்தகம் எதையும் தாக்கல் செய்யவில்லை. விஜயா வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்தால் தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல. வங்கி வரவு செலவு கணக்குபட்டியல் ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி பணம் வாங்கியதற்கு ரூ.50 பேப்பரில் எழுதி கொடுத்து 2 நபர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். பிரதிவாதி கையெழுத்து போடடுள்ளார். அதற்கு அவர் கணவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்.

5. 2022ல் எழுதி கொடுத்தார்கள். ஸ்டாம்பு மீது ஒரு கையெழுத்து அதற்கு கீழ் ஒரு கையெழுத்து போட்டுள்ளர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. சாம்ராஜ்தான் வாங்கிவந்து கொடுத்தார். சாம்ராஜ்யை சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை. எனக்கு படிப்பறிவு இல்லாததால் பத்திரத்தில் உள்ள முழுமையான விவரம் தெரியாது. பணம் வேண்டும் என யார்யாருக்கு அறிவிப்பு கொடுத்தேன் என்று தெரியவில்லை. அதற்கு பதில் கொடுக்கபட்டுள்ளதா என்று தெரியவில்லை.

6. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கையெழுத்து வழக்கு ஆவணங்களில் இல்லை என பதிலில் கூறபட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. கையெழுத்து நிபுணர் ஆய்விற்கு அனுப்பவேண்டும் என கூறபட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. பத்திரத்தில் சாட்சிகள் முழு முகவரி குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பத்திரத்தை யார் எழுதினார்கள் என்ற விவரம் சாம்ராஜிக்கு தான்

தெரியும். நான் சாம்ராஜிக்காக பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 14/07/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.07.14 15:27:59 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.